அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 125/2016
தேதி 27.7.2016

# தமிழக அரசின் மறு ஆய்வு மனுவிற்கு சாதகமான நடவடிக்கை வேண்டும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்

ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விடுவிப்பது குறித்து மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும் எனும் உச்ச நீதிமன்றம் (அரசியல் சாசன அமர்வு) வழங்கிய தீர்ப்பை மறு ஆய்வு செய்ய மனு அளித்திருக்கும் தமிழக அரசின் நடவடிக்கையை வரவேற்கிறேன்.

இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய வல்லுநர்கள் 161 வது பிரிவு தண்டனையை குறைக்கவும், மன்னிக்கவும் மாநில ஆளுநருக்கும் குடியரசு தலைவருக்கும் அதிகாரம் வழங்கி உள்ளனர். இதன் அடிப்படையிலேயே தமிழக அரசு இவர்களை விடுவிக்க தமிழக அரசுக்கு எந்த தடையும் இல்லை என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. மத்திய அரசின் உச்சிநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக அளித்த மனுவின் காரணமாகவே விடுதலை நிறுத்தி வைக்கப்பட்டது.

எனவே மேலும் வழக்கை நீடிக்காமல், விடுதலைக்கு தடைகோராமல், தமிழக அரசின் மறுசீராய்வு மனுவை பரிசீலித்து வழக்கில் சம்பந்தப்பட்ட 7 தமிழர்களையும் விடுதலை செய்ய முற்பட வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

"ஆலோசனை" என்ற வார்த்தைக்கும் "ஒப்புதல்" என்ற வார்த்தைக்கும் இருக்கும் வித்தியாசத்தை சட்டம் என்று வந்தால் மாற்றிக்கொள்ளலாம் என்று கூறி, மாநில அரசிற்கு இருக்கும் அதிகாரத்தை குறைத்து இந்த பிரச்சனையை தீர்வு இல்லாத ஒன்றாக மாற்றிட வேண்டாம் என்றும், தமிழக அரசின் மறு ஆய்வு மனுவிற்கு சாதகமான தீர்ப்பை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc
தலைவர்